**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 02 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 21 இல் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நீருதவு கருமங்களுக்கான மூன்று வகையான நன்கொடைப் பொருட்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கையிருப்புக் கணக்குகளுக்குள் கொண்டுவரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கையிருப்புக்களின் பெறுமதி குறைத்து காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

ஆயுள்வேத நன்கொடை ரூபா 38,280 பெறப்பட்டிருக்க கடந்த 29 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

ஓமந்தை விளையாட்டு மைதானத்திற்கான பெயர்ப் பலகை வளைவினை நிர்மாணித்தல் வேலைகள் நேர் முன்னைய வருடத்தில் முடிவுறுத்தப்பட்டிருந்தும் அதற்குரிய ஒப்பந்ததாரரான சமூக அடிப்படையிலான நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 237,842 நாளதுவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

கூட்டுமொத்தம் ரூபா 1,863,291 பெறுமதியான ஏழு வகையான நிலையான சொத்துக்கள், நிலையான வைப்புக்குரிய வங்கியின் விபரம், வங்கிக்கணக்கு இலக்கம், நிலையான வைப்புச் சான்றிதழ், வங்கி மீதி உறுதிப்படுத்தல் பத்திரம் மற்றும் முற்பணங்கள் பதிவேடு என்பன கிடைக்கப்பெறாமை காரணமாகக் கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்த்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 இன் பிரதேச சபை நிதி நிர்வாக விதிகள் | | |
| (i) விதி 217 | | சபையினால் பயன்படுத்தப்பட்டுவரும் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 60 | | வருட ஆரம்பத்தின் சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்களின் விபரம் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | |
| நிதி ஒழுங்கு விதி 571 | 4,030,759 | பத்து காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | வடக்கு மாகாண சபையின் நிதி விதிகள்<br>விதி 407 | சபையில் கடமை புரியும் சாரதிகளிடமிருந்து பிணைப் பணம் பெற்றுக்கொள்ள நாளதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

----------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

-------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 7,691,403 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 9,252,868 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

-------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 3,500,000 | 3,295,230 | 2,379,703 | 2,140,602 | 3,200,000 | 3,242,662 | 2,692,703 | 549,958 |
| (ii) | வாடகைகள் | 3,161,554 | 3,161,544 | 2,929,684 | 655,740 | 2,519,450 | - | 2,399,990 | 119,460 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,240,000 | 2,240,000 | 1,868,810 | - | 1,900,000 | - | 1,772,000 | 128,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 57,387,292 | 15,002,000 | 29,746,385 | - | 7,530,000 | - | 8,348,578 | - |

#### 2.2.2 ஏனைய வருமானம்

------------------------

சபைக்குரித்தான ஜே.சி.பி, மோட்டார் கிரேடர் மற்றும் மோட்டார் றோலர் என்பவற்றினை வாடகைக்கு கொடுத்தமை தொடர்பில் அறவிடப்படவேண்டியிருந்த வாடகை நிலுவை ரூபா 296,738 இனை கடந்த 05 ஆண்டுகளாக அறவிட்டுக்கொள்ள சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 6,487,831 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 2,449,626 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**திண்மக்கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) சபையின் குப்பைகளை கொட்டும் இடங்களிற்கு கொண்டு வரப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(vi) கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவு முறைமையொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(vii) திண்மக் கழிவுகள் மீள்சுழற்சிக்குட்படுத்தாது காணப்படுவதுடன் சூழல் பாதிப்படையக்கூடியவாறு தீ மூட்டி எரிக்கப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு கடந்த 11 வருடங்களாக ஆதன மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரியினை அறவிடப்பட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சரவுத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

நானாவித வைப்புக்களில் கடந்த 04 மாதங்களாகத் தேக்கிவைக்கப்பட்டிருக்கும் ரூபா 607,457 பெறுமதியான 06 பெறுமதி சேர் வரித் தொகைகள் தொடர்பிலான காரணங்கள் கணக்காய்வுக்கு அறியக்கிடைத்திருக்கவில்லை.

3.4 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் மூலம் ரூபா 814,719 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட தோணிக்கல் வாராந்த சந்தை கடந்த இரு வருடங்களாக உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டில் ரூபா 1,599,366 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கல்னாட்டியகுளம் பூங்கா கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பாவனையிலீடுபடுத்தப்படாமல் உள்ளது.

**3.4.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

நேர் முன்னைய ஆண்டிற்கான வருடாந்த கணிப்பீட்டுச் சபையினால் பாவனையிலீடுபடுத்த முடியாதவைகளெனப் பரிந்துரைக்கப்பட்ட 125 பொருட்கள் தொடர்பாக 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கைக்கு அமைவாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 கையளிக்கப்படாத சொத்துக்கள்**

சபையினால் 23 வாகனங்கள் கடந்த 03 ஆண்டுகளுக்கு மேலாக உபயோகிக்கப்பட்டு வந்திருந்தன. எவ்வாறாயினும் அவை சபைக்கு உரித்தற்றனவாகக் காணப்பட்டன.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே பாதகமான ரூபா 217,144 தொடக்கம் சாதகமான ரூபா 4,828,994 வரை அல்லது 6.20 சதவீதம் தொடக்கம் 69.48 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே பாதகமான ரூபா 371,631 தொடக்கம் சாதகமான ரூபா 3,657,998 வரை அல்லது 107.65 சதவீதம் தொடக்கம் 10.87 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) சொத்துக்கள்/ ஆதனம் | (i) பதிவு செய்யத் தவறியமை. |
| | (ii) பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்கு தவறியமை. |
| (ஆ) இருப்புக்கள் | (i) பொருள் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யத் தவறியமை. |
| | (ii) முறையற்ற இருப்புக்கள் கட்டுப்பாடு. |